**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 22 ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.40/2024**

1. T.குப்பமுத்து (இறப்பு)
2. பி.மு.திருமுருகன்
3. தி.உமாமகேஸ்வரி
4. தி.காளிஸ்வரன்
5. தி.மகரநாதன்
6. தி.ருத்ரகாந்த் ...வாதிகள்/மனுதாரர்கள்

/எதிர்/

1. P.முத்துராமலிங்கம்
2. வட்டாட்சியர், கடலாடி.
3. உதவி இயக்குநர்,
   நிலஅளவை துறை,
   இராமநாதபுரம். .....பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 09.01.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள்/மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.H.முரளிதரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியாக இராமநாதபுரம் மாவட்ட சர்வேயரையோ அல்லது அவர் அதிகாரம் பெற்ற சர்வே பற்றிய விபரம் தெரிந்த அலுவலரையோ மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி கட்டளை 16 விதி 4(2) சி.பி.சி.-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

தாவா சொத்தானது ஆதியில் தன் மனைவியான 1ம் வாதிக்கு கிரையம்கொடுத்த முன் பாத்தியஸ்தரான அப்துல் ரஜாக் மனைவியும், M.குப்பைபிச்சை மகளுமான ஜன்னத்பீவி என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், தாவா உள்ளிட் மொத்த சொத்தான சர்வே எண்.93/2 ல் 9 ஏக்கர் 32 சென்டில் எங்களின் முன்பாத்தியஸ்தரும் அவர் உடன் பங்காளிகளும் பாகம் செய்து கொண்டதில் தாவா சொத்திற்கு மேற்கே ரோட்டிற்கு என்று 32 சென்ட்டு இடத்தினை ஒதுக்கியது போக மீதமுள்ள இடத்தினை பாகம் செய்து கொண்டதில் எங்களின் முன் பாத்தியஸ்தருக்கு தாவா உள்ளிட்ட மொத்த சொத்தான 9 ஏக்கர் 32 சென்டில் சொத்தின் தென்புறத்தில் ஏக்க்ர 1 சென்ட் 12 ஐ பாகமாக ஒதுக்கி அவர்ஆண்டு அனுபவம் செய்து வந்தநிலையில் இந்த என் மனைவியானவர் கடந்த 31.05.1996 ம்தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு எங்களின் முன்பாத்தியஸ்திரடம் இருந்து கிரையம் பெற்று வருவாய் ஆவணங்களை தன் பெயருக்கு மாற்றி 1 முதல 3 பிரதிவாதிகளுக்கு நன்கு தெரிந்து ஆண்டு அனுபவம் செய்து வருகின்றார் என்றும், எங்களை போலவே தாவா எங்களின் கிரைய சொத்தான 1 ஏக்கர் 12 சென்டிற்கு வடபுறமாக வேலுத்தேவர் மகன் பால்ச்சாமி என்பவர் தங்கின் முன்பாத்தியஸ்தரின் பங்காளிகளிடம் கடந்த 1981ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி கிரைய பத்திரத்தில் தாவா சொத்தான 1 ஏக்க்ர 12 சென்ட்டு இடத்தினை எங்களின் முன்பாத்தியஸ்தரையே ஜன்னத்பீவி இடத்தினையே தெநறகு மாலாக காட்டப்பட்டுள்ளது என்றும், அது போலவே மேற்படி தாவா சொத்திற்கு வடபுறமாக கிரையம் பெற்ற பால்ச்சாமி தேவ்ர கடந்த 15.06.1987ம் தேதி மூக்கையா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரையப்பத்திரத்திலும் தாவா சொத்தினை தெற்குமாலாக காட்டியுள்ளார் என்றும், மேற்படி மூக்கையாவின் இறப்பிற்கு பின் அவரது மனைவி வேலம்மாள் என்பவரிடமிருந்து 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கடந்த 19.06.1995ம் வருடம் கிரையம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி கிரைய ஆவணத்திலும் வாதியின் முன் பாத்தியஸ்தரான ஜன்னத்பீவி இடத்தினையே தெற்கு மாலாக காட்டியுள்ளார்கள் என்றும், இந்நிலையில் தன் மனைவியானவர் தாவா மொத்த சொத்தினையும் கிரையம் பெற்று சட்ட காலத்திற்கு மேலாக பிரதிவாதிக்கு நன்கு தெரிந்து நிராட்சபணையாக

அமைதியாக அனுபவம் செய்து வந்தநிலையில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தின் வடபுறத்தில் தென்வடலாக 8 அடி அளவும் கிழமேலாக 20 அடி அளவுள்ள இடத்தினையும் ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்ட போவதாக கூறி அதற்கான நடபடியில் இருந்து வருகின்றார் என்றும், இது குறித்து 2ம் பிரதிவாதியிடம் தன் மனைவி மனுதாக்கல் செய்து தாவா சொத்தை அளவீடு செய்து கொடுக்குமாறு கேட்டதில் தாவா சொத்துக்கான வருவாய் ஆவணங்கள் ஆனைத்தும் சரியாக இருந்த நிலையில் 3ம் பிரதிவாதி அலுவலகத்தால் பராமறிக்கப்படும் தாவா சொத்து அடங்கிய நிலஅளவை வரைபடமான F.M.B. வரைபடத்தில் அளவுகள் குறைவாக இருப்பதாக கூறி ஸ்தலத்திலும் கிரைய பத்திரத்தில் குறிப்படப்பட்டுள்ள இடமிருந்தும் கூட 3ம் பிரதிவாதியின் கண்காணிப்பில் செயல்படும் சர்வேயர்கள் தாவா சொத்தினை அளவீடு செய்து தர மறுக்கிறார்கள் என்றும், இந்த சூழ்நிலையை தனக்கு சாதமாக்கிகொண்டு 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் வீடு கட்ட எத்தனித்து அதற்கான ஆயத்த பணி செய்து வருவது குறித்து 2ம் பிரதிவாதி தன் மனைவியானவர் அளவுகளை சரி செய்துதரக் கேட்ட பொழுது 3ம் பிரதிவாதியின் எழுத்துபூர்வ உத்தரவு இருந்தால் மட்டுமே F.M.B ல் ஏற்பட்ட தவறை சரிசெய்ய உத்தரவு பிறப்புவிக்கமுடியும் செய்யப்பட்டு தாவா சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட F.M.B தவறை சரிசெய்யும் முன்பாக 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் வீட்டைக்கட்டி தங்களின் அமைதியான அனுபவத்திற்கு கலங்கமும் சலனமும் ஏற்படுத்திவிட கூடிய சூழ்நிலை நிலவியதால் 1ம் வாதியான தன் மனைவியால் தாவா வழக்கினை தாக்கல் செய்ய வேண்டிய அவசிய அவசர சூழ்நிலை ஏற்பட்டதால் தாவா வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கில் 3ம் பிரதிவாதியானவர் தரப்பினராக இருந்த போதும் தாவா வழக்கில் ஆஜராகி எதிர்வழக்காடவில்லை என்பதால் 3ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் சர்வேயர்கள் தாவா சொத்தில் ஏற்படுத்தி தவறு குறித்து ஒரு தெளிவான விளக்கத்தை சமூகம் நீதிமன்றத்திற்கு துலக்க இயலாமல் போய்விட்டது. தாவா வழக்கு சொத்தில் தவறான உட்பிரிவு நில அளவை வரைபடத்தில் ஏற்படுத்தியதாலேயே தாவா வழக்கின் வியாஜ்ஜிய உற்பத்தி ஏற்பட்டுள்ளதாகவும், தாவா வழக்கில் 3ம் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் எங்களால் கோரியுள்ளதால் தாவா வழக்கில் ஏற்பட்ட தவறான உட்பிரிவு பற்றிய விபரங்களை சமூகம் நீதிமன்றத்திற்கு துலக்க வேண்டிய அவசியமும் அத்தியாவசியமும் தங்களுக்கு

ஏற்பட்டுள்ளது என்பதால் தாவா வழக்கில் இராமநாதபுரம் மாவட்ட சர்வேயர் அவர்களையோ அல்லது அந்த அந்தஸ்துக்கு குறைவில்லாத சர்வே பற்றி முழு விபரங்கள் நன்கு தெரிந்த அலுவலரையோ தங்கள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்து அவர் மூலமாக தாவா வழக்குரை சங்கதிகளை சமூகம் நீதிமன்றத்திற்கு தெளிவாக்க வேண்டியுள்ளதால் தாவா வழக்கில் இராமநாதபுரம் மாவட்ட சர்வேயரையோ அல்லது அவர் அதிகாரம் பெற்ற அவர் அந்தஸ்துக்கு குறைவில்லாத சர்வே பற்றிய விபரம் தெரிந்த அலுவலரையோ தங்கள் தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்து அவர் மூலமாக மனுவில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களாக குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் குறியீடு செய்து கொள்ள வேண்டியதாய் இருக்கிறது என்பதால் அவ்வாறு விசாரணை செய்ய அனுமதி அளித்து உத்திரவிடக் கோரியும், தாவா வழக்கில் தங்கள் தரப்பு கூடுதல் சாட்சியாக இராமநாதபுரம் மாவட்ட சர்வேயரையோ அல்லது அவர் அதிகாரம் பெற்ற அவர் அந்தஸ்துக்கு குறைவில்லாத சர்வே பற்றிய விபரம் தெரிந்த அலுவலரையோ தங்கள் தரப்பு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதியளித்தும் அவர் மூலமாக மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை சமர்ப்பித்து சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள அனுமதித்தும் உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.</u>**

மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் அனைத்தும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் மறுத்து ஆட்சேபணை செய்யப்படுவதாகவும், மனுவிற்கு தேவையான காரணங்களாக எதையும் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், மனுவில் சொல்லப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு எந்த வகையில் தேவைப்படுகின்றன என்ற தெளிவாக விளக்கமும் மனுவில் இல்லை என்றும், வழக்கில் தாவா சொத்தில் ஏற்பட்டுள்ள உட்பிரிவுகள் மற்றும் விவரங்கள் சமூகம் நீதிமன்றத்திற்கு துலக்க வேண்டி அவசியமும் அத்தியாவிசமும் மனுதாரருக்கு ஏற்பட்டதாகவும், அதனால் இராமநாதபுரம் மாவட்ட சர்வேயர் அல்லது அவரின் அந்தஸ்துக்கு குறைவில்லாத சர்வே பற்றி முழு விபரங்கள்

தெரிந்த அலுவலரை விசாரணை செய்ய வேண்டி மனு செய்தது தவறு கடலாடி வட்டத்திலேயே பொதுவாக சர்வே உட்பிரிவு மற்றும் சர்வே விவரங்கள் நன்கு தெரிந்த தாலுகா சர்வேயர்கள் இருக்கும் நிலையில் அவர்களை விசாரணைக்கு அழைக்காமல் இராமநாதபுரம் மாவட்ட சர்வேயரை அழைக்க மனு செய்தது வழக்கை இழுத்தடிக்க வேண்டிய நோக்கம் என்றும், குறிப்பாக மாவட்ட சர்வேயர் சாட்சியம் அளிக்க ஆவணங்களுடன் எதற்காக ஆஜராக வேண்டும் என்ற விவரமும் மனுவில் இல்லை என்றும், மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், மனுவின் பேரில் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதே மனுதாரர்கள் நோக்கம் என்பது தெளிவாக தெரிகிறது என்றும், மனுதாரர் தரப்பில் மனு செய்திருப்பது வழக்கை முழுக்க முழுக்க விரைந்து முடிக்க விடாமல் தடுக்கும் நோக்குடன் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்யப்படுகிறது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கில் வாதி தரப்பு சாட்சி விசாரணை நடைபெற்று வந்த நிலையில், கடந்த 05.11.2025ம் தேதியன்று மனுதாரர் தரப்பில் இம்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 3ம் பிரதிவாதியின் கட்டுப்பாட்டில் உள்ள சர்வேயர்கள் தாவா சொத்தில் ஏற்படுத்தியுள்ள தவறுகளை தெளிவாக நீதிமன்றத்திற்கு துலக்க வேண்டும் என்பதால் இராமநாதபுரம் மாவட்ட சர்வேயரையோ, அல்லது அதற்கு குறைவில்லாத அலுவலர்களோ மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதிக்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கில்

மட்டுமே மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுவில் சொல்லப்பட்ட ஆவணங்கள் வழக்கிற்கு எந்த வகையில் தேவைப்படுகின்றன என்ற தெளிவாக விளக்கம் இல்லை என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் வேறு எந்தவொரு கடுமையான ஆட்சேபனைகளும் தெரிவிக்கப்படவில்லை.

தாவா சொத்தான ஏக்கர் 1 சென்டு 12 யை பாகமாக மனுதாரரின் மனைவியானவர் கடந்த 31.05.1996ம் தேதி அவரது முன்பாத்தியஸ்தரிடம் இருந்து கிரையம் பெற்றதாகவும், தாவா சொத்து அடங்கிய நிலஅளவை வரைபடமான F.M.B. வரைபடத்தில் அளவுகள் குறைவாக இருப்பதாக கூறி கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ள சங்கதிகள் குறித்த தெளிவான விளக்கத்தினை நீதிமன்றம் அறிந்து கொள்ளும் பொருட்டு மேற்படி சாட்சியை விசாரணை செய்வதால் வழக்கில் எந்தவொரு பாதகமாக சூழலும் ஏற்படப்போவதில்லை என்பதை கருத்தில் கொண்டு, மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்பதால் மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 22.01.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.01.22 17:27:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.01.22 17:27:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.